ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව / இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் / முழுப் பதிப்புரிமையுடையது /All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2022(2023)
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2022(2023)
General Certificate of Education (Adv. Level) Examination, 2022(2023)

සාමාන්‍ය පොදු පරීක්ෂණය
பொதுச் சாதாரணப் பரீட்சை
Common General Test

**12 T**

පැය දෙකයි
இரண்டு மணித்தியாலம்
Two hours

**அறிவுறுத்தல்கள் :**

- எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.
- **கணிப்பான்கள் பயன்படுத்த இடமளிக்கப்படமாட்டாது.**
- விடைத்தாளில் தரப்பட்டுள்ள இடத்தில் உமது **சுட்டெண்ணை** எழுதுக.
- விடைத்தாளின் மறுபக்கத்தில் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களைக் கவனமாக வாசித்துப் பின்பற்றுக.
- **1** தொடக்கம் **50** வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் (1), (2), (3), (4), (5) என இலக்கமிடப்பட்ட விடைகளில் **சரியான** அல்லது **மிகப் பொருத்தமான** விடையைத் தெரிந்தெடுத்து, **அதனைக் குறித்து நிற்கும் இலக்கத்தைத் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கு அமைய** விடைத்தாளில் **புள்ளடி** (×) இடுவதன் மூலம் காட்டுக.

**1.** இந்திய சனாதிபதியினால், 2020 ஆம் ஆண்டுக்காக கலாநிதி வஜிரா சித்ரசேனவிற்கு வழங்கப்பட்ட கௌரவ விருது ஒன்று 2021 நவம்பர் மாதத்தில் இலங்கைக்கான இந்தியத் தூதுவரால், அவரிடம் கையளிக்கப்பட்டது. அவ்விருதின் பெயர் யாது?
(1) அர்ஜுன விருது (2) பத்ம விபூஷண் (3) பத்ம பூஷண்
(4) பாரத ரத்னா (5) பத்ம ஸ்ரீ

**2.** காலஞ்சென்ற இரண்டாம் எலிசபெத் இராணி 1952 பெப்ரவரி 6 ஆந் திகதி பிரித்தானிய முடிசூடிய 70 ஆவது ஆண்டு விழாவை 2022 ஆம் ஆண்டில் பொதுநலவாய சபை கொண்டாடியது. அவ்விழாவின் பெயர்
(1) மாணிக்க (ரூபி) விழாவாகும். (2) பிளாற்றினம் விழாவாகும். (3) பொன் விழாவாகும்.
(4) வைர விழாவாகும். (5) நீலமணி(சபயர்) விழாவாகும்.

**3.** இலங்கையின் மிகப்பெரிய சிமெந்துத் தொழிற்சாலையாகிய வரையறுக்கப்பட்ட லங்வா சங்ஸ்தா சிமெந்து (தனியார்) கூட்டுத்தாபனம் 2022 மார்ச் மாதத்தில் கோலாகலமாகத் திறந்துவைக்கப்பட்டது. அத்தொழிற்சாலை பின்வரும் எந்த ஏற்றுமதி பதப்படுத்தல் வலயத்தில் (EPZ) அமைந்துள்ளது?
(1) மிரிஜ்ஜவிலை EPZ (2) சீதாவக்கை EPZ (3) மாவத்தகம EPZ
(4) ஹொறணை EPZ (5) பொல்கஹவெல EPZ

**4.** இதுவரையில் கொரோனா வைரசு நோய் - 2019 (COVID - 19) தொடர்பில் பல பேதங்கள் இனங்காணப்பட்டுள்ளன. பின்வருவனவற்றில் அப்பேதங்களில் **அடங்காதது** எது?
(1) அல்.்.பா (2) பீற்றா (3) காமா
(4) டெல்ற்றா (5) எப்சிலோன்

**5.** 2022 பெப்ரவரி மாதத்தில் ரஷ்யா, கிழக்கு ஐரோப்பிய நாடொன்றில் பாரிய இராணுவ நடவடிக்கையொன்றினை ஆரம்பித்தது. அந்நாட்டின் பெயர் யாது?
(1) போலந்து (2) பெலரூஸ் (3) சுலோவேக்கியா
(4) மோல்டோவா (5) யுக்ரேன்

**6.** 2021 ஆகஸ்ட் மாதத்தில் ஆப்கானிஸ்தானில் ஓர் அரசைத் தாபித்த அரசியல் இயக்கத்தின் பெயர் யாது?
(1) ஹமாஸ் (2) அல் - காஇதா (3) தலிபான்
(4) போகோ ஹறாம் (5) ஹிஸ்புள்ளா

[பக். 2 ஐப் பார்க்க

school Exam & Seminar Papers

7. இலங்கையின் வலதுகுறைந்த ஒரு விளையாட்டு வீரராகிய தினேஷ் பிரியந்த ஹேரத், 2021 ஆகஸ்ட் மாதத்தில் நடைபெற்ற பிரதான சர்வதேச விளையாட்டுப் போட்டியொன்றில் F46 பிரிவின் ஆண்களுக்கான ஈட்டி எறிதல் நிகழ்ச்சியில் புதிய உலக சாதனையைப் படைத்து தங்கப்பதக்கம் வென்றார். அவ்விளையாட்டுப் போட்டி யாது?
(1) ஆசிய பரா விளையாட்டுக்கள்
(2) டோக்கியோ பரா ஒலிம்பிக் விளையாட்டுக்கள்
(3) பரபன் அமெரிக்க விளையாட்டுக்கள்
(4) பொதுநலவாய சபை விளையாட்டுக்கள்
(5) விசேட ஒலிம்பிக் விளையாட்டுக்கள்

8. பல்தரப்பு தொழினுட்ப, பொருளாதார ஒத்துழைப்புக்கான வங்காள மன்றம் (BIMSTEC) என்பது ஏழு தெற்காசிய, தென்கிழக்காசிய நாடுகளின் ஒரு சர்வதேச அமைப்பாகும். 2022 ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் நடைபெற்ற ஐந்தாம் BIMSTEC இன் உச்சி மாநாட்டிற்கு உபசரணை வழங்கிய நாடு இலங்கையாகும். BIMSTEC இன் உறுப்புநாடு **அல்லாதது** பின்வருவனவற்றுள் எது?
(1) பாகிஸ்தான் (2) பங்களாதேஷ் (3) பூட்டான்
(4) இந்தியா (5) நேபாளம்

9. பச்சைவீட்டு வாயுக்கள், புவி வளிமண்டலத்தில் வெப்பத்தைப் பற்றிவைக்கும் வாயுக்களாக இனங்காணப்பட்டுள்ளன. பச்சைவீட்டு வாயு **அல்லாதது** பின்வருவனவற்றுள் எது?
(1) ஐதரோபுளோரோகாபன்கள் (2) மெதேன் (3) நைத்திரசு ஒட்சைட்டு
(4) காபனீரொட்சைட்டு (5) ஐதரசன்

10. ஐக்கிய நாடுகள் அமைப்புடன் (UNO) நேரடியாகத் **தொடர்புறாத** அமைப்பு பின்வருவனவற்றுள் எது?
(1) உணவு, விவசாய சம்மேளனம் (FAO)
(2) பிராந்திய ஒத்துழைப்புக்கான தெற்காசிய சங்கம் (SAARC)
(3) சர்வதேச தொழிலாளர் தாபனம் (ILO)
(4) உலக சுகாதார தாபனம் (WHO)
(5) சர்வதேச நாணய நிதியம் (IMF)

11. ஒரு பேரங்காடி (supermarket) அதன் வாடிக்கையாளர் ஒவ்வொருவருக்கும் அவர் ரூபாய் 5000 இற்கு மேற்படச் செலவிடும் ஒவ்வொரு ரூபாய்க்கும் ரூபாய் 1500 உயர்ந்தபட்ச கழிவுப் பெறுமானத்துக்குட்பட 12% விலைக்கழிவை வழங்கும் விற்பனை மேம்பாட்டுச் செயற்பாட்டை நடைமுறைப்படுத்தியுள்ளது. உயர்ந்தபட்சக் கழிவைப் பெறுவதற்குத் தேவையான குறைந்தபட்சச் சிட்டைப் பெறுமானம் யாது?
(1) ரூபாய் 12 500 (2) ரூபாய் 12 501 (3) ரூபாய் 17 500
(4) ரூபாய் 17 501 (5) ரூபாய் 18 000

12. பத்மா, ஸ்ரீயானி ஆகியோர் கம்பனியொன்றில் தரவு உள்ளீட்டாளர்கள் இருவராவர். பத்மா 36 பக்க தரவுகளை கணினியில் உள்ளீடு செய்வதற்கு 5 மணித்தியாலங்கள் எடுக்கும் அதே வேளை, ஸ்ரீயானி 48 பக்கங்களுக்காக 6 மணித்தியாலங்கள் எடுக்கின்றாள். இருவரும் சேர்ந்து தனித்தனிக் கணினிகளைப் பயன்படுத்தி 171 பக்கத் தரவுகளை உள்ளீடு செய்யும் பணி அவர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. அதற்காக அவர்கள் எவ்வளவு நேரத்தைச் செலவு செய்வர்?
(1) 9 மணித்தியாலம் 15 நிமிடங்கள் (2) 10 மணித்தியாலம் 15 நிமிடங்கள்
(3) 10 மணித்தியாலம் 25 நிமிடங்கள் (4) 11 மணித்தியாலம் 15 நிமிடங்கள்
(5) 11 மணித்தியாலம் 25 நிமிடங்கள்

13. 2021 ஆம் ஆண்டில் இலங்கைக் கிரிக்கட் அணி டெஸ்ட் போட்டிகள், ஒருநாள் சர்வதேசப் போட்டிகள், T20 சர்வதேசப் போட்டிகள் ஆகியவற்றில் வெற்றி பெற்ற சதவீதங்கள் முறையே 33, 29, 40 ஆகும். அக்காலப்பகுதியில் டெஸ்ட் போட்டிகளிலும் ஒருநாள் சர்வதேசப் போட்டிகளிலும் வெற்றிபெற்ற இணைந்த சராசரி சதவீதம் 30 ஆகும். ஒருநாள் சர்வதேசப் போட்டிகளிலும் T20 சர்வதேசப் போட்டிகளிலும் வெற்றி பெற்ற இணைந்த சராசரி சதவீதம் 35 ஆகும். 2021 இல் இலங்கைக் கிரிக்கட் அணி, இந்த மூன்று வகைப் போட்டிகளிலும் வெற்றி பெற்ற இணைந்த சராசரி சதவீதம் கிட்டிய முழு எண்ணுக்கு மட்டந்தட்டப்படும்போது எவ்வளவாகும்?
(1) 27 (2) 32 (3) 35 (4) 38 (5) 40

[பக். 3 ஐப் பார்க்க

**14.** ஒரு புகையிரதமானது பி.ப. 1.00 மணிக்கு மாத்தறையிலிருந்து புறப்பட்டு பி.ப. 6.20 மணிக்கு மருதானையை அடைகின்றது. மற்றுமொரு புகையிரதம் பி.ப. 3.00 மணிக்கு மருதானையிலிருந்து புறப்பட்டு பி.ப. 6.40 மணிக்கு மாத்தறையை அடைகின்றது. மாத்தறைக்கும் மருதானைக்கும் இடையிலான தூரம் 160 km ஆக இருக்கும் அதே வேளை, இரண்டு புகையிரதங்களும் மாறா சராசரிக் கதிகளில் செல்லும் எனின், அப்புகையிரதங்களிரண்டும் ஒன்றையொன்று சந்திக்கும் நேரம் யாது?

(1) பி.ப. 3.07 (2) பி.ப. 3.57 (3) பி.ப. 4.02
(4) பி.ப. 4.22 (5) பி.ப. 4.32

**15.** $A, B$ என்னும் இரண்டு பேரங்காடிகள் ஒரு குறித்த வகை உணவுப்பொருளை அதன் குறித்த விலையில் முறையே 10%, 15% கழிவுடன் விற்பனை செய்கின்றன. ஒரு குறித்த நாளில் மற்றுமொரு விற்பனை மேம்பாட்டுச் செயற்பாடு காரணமாக, $A, B$ ஆகிய பேரங்காடிகள் அதே உணவுப்பொருளுக்கு ஏற்கெனவே கழிவு வழங்கப்பட்டதன் பின்னரான விலையில் மேலும் முறையே 15%, 20% கழிவை வழங்குகின்றன எனவும், அதற்கமைய இரண்டு பேரங்காடிகளின் விலைகளுக்கு இடையே ரூபாய் 20 வித்தியாசம் காணப்படுகின்றது எனவும் நிமலன் அறிந்து கொள்கின்றார். இந்த உணவுப்பொருட்களின் குறித்த விலை கிட்டிய முழு எண்ணுக்கு மட்டந்தட்டப்பட்டபோது எத்தனை ரூபாய்?

(1) 135 (2) 235 (3) 245 (4) 335 (5) 345

**16.** திரு. சில்வா, ஒரு சனிக்கிழமை சரியான நேரமாகிய மு.ப. 9.00 இற்கு தனது கைக்கடிகாரத்தின் அலாரத்தை (Alarm) அடுத்த திங்கட்கிழமை மு.ப. 11.00 இற்கு ஒலிக்குமாறு தயார் செய்கின்றார். அவர் தனது கைக்கடிகாரம் தவறுள்ளதாக இருப்பதையும் ஒவ்வொரு 24 மணித்தியாலத்திற்கும் 20 நிமிடங்கள் முந்துவதையும் அறிந்திருக்கவில்லை. அலாரம் அடிக்கும்போது சரியான நேரம் யாது?

(1) மு.ப. 10.00 ஐக் கடந்து 18 நிமிடம் 54 செக்கன்
(2) மு.ப. 10.00 இற்கு முன்பாக 18 நிமிடம் 54 செக்கன்
(3) மு.ப. 10.00 ஐக் கடந்து 15 நிமிடம் 20 செக்கன்
(4) மு.ப. 10.00 இற்கு முன்பாக 15 நிமிடம் 20 செக்கன்
(5) பி.ப. 10.00 ஐக் கடந்து 18 நிமிடம் 54 செக்கன்

**17.** ஒரு வருடத்துக்கு முன்னர் சாரதா இனதும் சரண் இனதும் வயதுகளுக்கு இடையிலான விகிதம் 3 : 4 ஆக இருந்தது. மூன்று வருடங்களின் பின்னர் அவ்விகிதம் 5 : 6 ஆகும். சாரதா இனது தற்போதைய வயது எவ்வளவு?

(1) 6 வருடங்கள் (2) 7 வருடங்கள் (3) 8 வருடங்கள்
(4) 9 வருடங்கள் (5) 10 வருடங்கள்

**18.** ஒரு புகையிரதமானது, புகையிரதப் பாதைக்குச் சமாந்தரமான ஒரு பாதையில் முறையே $2 \text{ km h}^{-1}, 4 \text{ km h}^{-1}$ கதிகளில் நடந்து செல்லும் இரண்டு மனிதர்களைக் கடந்து செல்கின்றது. புகையிரதமும் அவ்விரு மனிதர்களும் ஒரே திசையில் நடந்து செல்கின்றனர். இப்புகையிரதம் அந்த இரண்டு மனிதர்களையும் முறையே 36, 40 செக்கன்களில் முழுமையாகக் கடந்து செல்லும் எனின், இப்புகையிரதத்தின் நீளம் யாது?

(1) 100 m (2) 150 m (3) 180 m (4) 200 m (5) 250 m

**19.** திருமதி பெரேரா ஒரு குறித்த பணத்தொகையை உரிய காலத்துள் ஒரே எளிய வட்டி வீதத்தில் ஐந்து ஆண்டுகளுக்குப் பின்னர் ரூபாய் 2.55 மில்லியனாகவும், எட்டு ஆண்டுகளுக்குப் பின்னர் ரூபாய் 3.18 மில்லியனாகவும் வளரும் என்ற எதிர்பார்ப்புடன் வங்கியொன்றில் வைப்புச் செய்கின்றார். திருமதி பெரேராவுக்கு அவ்வங்கியினால் செலுத்தப்படும் ஆண்டு வட்டி வீதம் யாது?

(1) 12% (2) 12.5% (3) 14% (4) 14.5% (5) 15%

**20.** இலங்கையில் உள்ள வெளிநாட்டுத் தொழில் முகவர் நிலையமொன்று கடந்த மாதத்தில் 20 : 6 : 1 எனும் விகிதத்தில் வீட்டுப் பணிப்பெண்கள், தாதியர், தொழினுட்பவியலாளர்கள் குழுவொன்றினை ஓமான் நாட்டுக்கு அனுப்பியுள்ளது. அவ்வொவ்வொரு வகைகளையும் சேர்ந்த ஒருவரின் ஆள்வீத மாதச் சம்பளங்கள் முறையே 2 : 7 : 6 எனும் விகிதத்தில் அமைந்துள்ளது. முகவர் நிலையத்தினால் அனுப்பப்பட்ட தாதியர் எண்ணிக்கை 30 ஆகவும், ஒட்டுமொத்தக் குழுவின் மொத்த மாதச் சம்பளம் 26,400 ஓமான் ரியால்(OR) ஆகவும் இருப்பின், தரப்பட்டுள்ள ஒழுங்கு முறையில் ஒவ்வொரு ஊழியர் வகையிலும் ஒருவருக்குச் செலுத்தப்படும் மாதச் சம்பளம் எவ்வளவு?

(1) 120 OR, 420 OR, 280 OR (2) 120 OR, 420 OR, 360 OR
(3) 130 OR, 420 OR, 260 OR (4) 150 OR, 450 OR, 250 OR
(5) 160 OR, 420 OR, 260 OR

School Exam & Seminar Papers

● **21, 22** ஆகிய வினாக்கள் எண் $n$ ஐ வகைகுறிப்பதற்கு $n$ எண்ணிக்கையான சிறிய வட்டங்களைப் பயன்படுத்தி 'யூனேரியா' எனும் கற்பனையான ஒரு நாகரிகத்திலிருந்து கண்டுபிடிக்கப்பட்ட பின்வரும் சரியான மூன்று சமன்பாடுகளை அடிப்படையாகக் கொண்டவை.

○ ○ ○ ? ○ / ○ ○ ○ ○

○ ○ ○ # ○ ○ / ○

@ ○ ○ ? ○ ! & ○ / ○ ○ ○

**21.** கீழே தரப்பட்டுள்ள யூனேரிய சமன்பாடுகளில் **பிழையானது** எது?


(1) ○ # @ ○ & ○ ! / ○
(2) @ ○ ○ # ○ ! & ○ ○ / ○ ○
(3) ○ ? @ ○ ○ & ○ ! / ○ ○ ○
(4) ○ ? @ ○ & ○ ! / ○ ○
(5) ○ ○ # @ ○ & ○ ! / ○


**22.** பின்வரும் யூனேரிய கோவைகளில் எது மீதமின்றி 3 இனால் வகுபடத்தக்கது?

(1) @ ○ ? ○ ○ ! & ○ ○
(2) @ ○ ○ # ○ ! & ○ ○
(3) ○ ○ & @ ○ # ○ ○ !
(4) ○ ? ○ ? ○ ○
(5) ○ ○ ? @ ○ & ○ ○ !

**23.** ஒன்றுக்கொன்று செங்குத்தாகப் பொருத்தப்பட்டுள்ள இரண்டு தளவாடிகளுக்கு முன்னால் வைக்கப்பட்டுள்ள கடிகார முகமொன்று உருவில் காட்டப்பட்டுள்ளது.


ஆடிகளின் ஊடாகப் பார்க்கும்போது வெறும் வட்டத்தினால் காட்டப்பட்டுள்ள இடத்தில் தென்படக்கூடிய சரியான விம்பத்தினை காட்டும் உரு பின்வருவனவற்றுள் எது?





(1) (2) (3) (4) (5)

**24.** ஆறு சதுரங்களாலான கோலமொன்று உருவில் காட்டப்பட்டுள்ளது. ஒவ்வொரு சதுரத்திலும் கேத்திரகணித உருவொன்று வரையப்பட்டுள்ளது. இக்கோலத்தைப் பயன்படுத்தி ஒரு சதுரமுகி அதன் முகங்களில் ஆறு உருக்களும் காணப்படத்தக்கதாக அமைக்கப்படுகின்றது. □, ⊠, ○ ஆகிய உருக்கள் காணப்படும் மூன்று முகங்களுக்கும் எதிரே முறையே முகங்களின் மீது இருக்கும் மூன்று உருக்களையும் காட்டுவது பின்வருவனவற்றுள் எது?



(1) ▤, ⊗, ⊜
(2) ▤, ⊜, ⊗
(3) ⊗, ▤, ⊜
(4) ⊗, ⊜, ▤
(5) ⊜, ▤, ⊗

**25.** இருசமபக்கச் செங்கோண முக்கோணி வடிவச் சுவரொன்று அதன் செங்கோணம் வான்நோக்கி அமையத்தக்கதாக சமச்சீராகத் தாபிக்கப்பட்டுள்ளது. இச்சுவரில் அடியிலிருந்து உச்சிவரைக்கும் அலகுப்பரப்பளவுக்கு ஒரு மாறா வீதத்தின்படி வர்ணப்பூச்சுப் பூசப்பட்டதோடு, உயரத்தின் பாதியளவு வரையில் பூச்சுப் பூசுவதற்கு ரூபாய் 6000 செலவாகியது எனின், வர்ணப் பூச்சுப் பூசுவதற்கான மொத்தச் செலவு எவ்வளவு?

(1) ரூபாய் 7000 (2) ரூபாய் 8000 (3) ரூபாய் 10 000 (4) ரூபாய் 12 000 (5) ரூபாய் 15 000

30893



● **26** தொடக்கம் **30** வரையிலான வினாக்களுக்காக 'நெல்நதிகம' எரிபொருள் நிரப்பு நிலையத்தில் அடுத்த வாரம் பெற்றோலும் டீசலும் கிடைக்கும் சாத்தியக்கூறு தொடர்பாக ஒரு ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற பின்வரும் உரையாடலைக் கருதுக.

அமல் : அடுத்த இரண்டு நாட்களில் எரிபொருள் பவுசர் எதுவும் வராது. மனிதர்கள் வரிசைகளில் நேரத்தை வீணாக்குகின்றனர். எனினும் புதன்கிழமை அதிகாலையில் பெற்றோல், டீசல் ஆகிய இரண்டு வகைகளும் வரும். அவை மூன்று நாட்களுக்கு அல்லது மூன்றுக்கு மேற்பட்ட நாட்களுக்குப் போதுமானதாக இருக்கும்.

பவன் : ஐயோ நண்பரே, புதன்கிழமை பெற்றோலோ வியாழக்கிழமை டீசலோ கிடைக்கப்போவதில்லை.

காசிம் : ஐயோ நெல்நதிகம எரிபொருள் நிரப்பு நிலையத்தில் தற்போது பெற்றோல், டீசல் ஆகிய இரண்டு வகைகளும் உள்ளன என்பது உங்களுக்கு தெரியாதா? வியாழக்கிழமை இரவாகும்போது அவை முடிந்துவிடும் என்பதுதான் கவலை; அதனால் வெள்ளிக்கிழமை எரிபொருள் இருக்காது!

டேவிட் : எனக்கு புதன்கிழமையன்று ஒருவரை அழைத்துச் செல்ல நேரிடும். அன்றைய தினம் அங்கு பெற்றோல், டீசல் ஆகிய இரண்டு வகைகளும் இருக்கும்.

எமில் : நண்பர்களே, புதிதாக எரிபொருள் பவுசர்கள் வரமுடியும் தானே! வியாழக்கிழமையும் வெள்ளிக்கிழமையும் பெற்றோலும் டீசலும் இருக்கும் என்பது உறுதி.

**26.** புதன்கிழமை நள்ளிரவு வரையில் பெற்றோல் வராவிட்டால், எத்தனைபேர் திட்டவட்டமான **பொய்யான** கூற்றுக்களை வெளியிட்டோராவர்?
(1) 1 (2) 2 (3) 3 (4) 4 (5) 5

**27.** வியாழக்கிழமை டீசல் கிடைத்ததாயின் எத்தனைபேர் திட்டவட்டமாக **பொய்யான** கூற்றுக்களை வெளியிட்டோராவர்?
(1) 1 (2) 2 (3) 3 (4) 4 (5) 5

**28.** ஒருவர் மாத்திரம் உண்மை கூறியுள்ளாரெனக் கருதுக. வியாழக்கிழமை டீசல் இருந்ததோடு, வெள்ளிக்கிழமை பெற்றோல் இருக்கவில்லையெனின், உண்மை கூறியவர் யார்?
(1) அமல் (2) பவன் (3) காசிம் (4) டேவிட் (5) எமில்

**29.** இருவர் மாத்திரம் உண்மை கூறினார்கள் எனின், நெல்நதிகம எரிபொருள் நிரப்பு நிலையத்தில் நிச்சயமாக டீசல் இருக்கக்கூடிய இரு நாட்களும் எவை?
(1) திங்கட்கிழமையும் செவ்வாய்க்கிழமையும்
(2) செவ்வாய்க்கிழமையும் புதன்கிழமையும்
(3) புதன்கிழமையும் வியாழக்கிழமையும்
(4) வியாழக்கிழமையும் வெள்ளிக்கிழமையும்
(5) புதன்கிழமையும் வெள்ளிக்கிழமையும்

**30.** அதிக எண்ணிக்கையான நபர்கள் உண்மை கூறுகின்றனர் எனின், பின்வரும் எக்கூற்று உண்மையானது?
(1) செவ்வாய்க்கிழமை பெற்றோல் இருக்கும் அதே வேளை திங்கட்கிழமை டீசல் இருக்காது.
(2) வியாழக்கிழமை பெற்றோல் இருக்கும் அதே வேளை திங்கட்கிழமை டீசல் இருக்காது.
(3) திங்கட்கிழமை பெற்றோல் இருக்காத அதே வேளை செவ்வாய்க்கிழமை டீசல் இருக்கும்.
(4) செவ்வாய்க்கிழமை பெற்றோல் இருக்காத அதே வேளை புதன்கிழமை டீசல் இருக்காது.
(5) வியாழக்கிழமை பெற்றோல் இருக்காத அதே வேளை புதன்கிழமை டீசல் இருக்கும்.

**31.** பத்து நபர்கள் எழுமாறாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளதாகக் கருதுக. அவர்கள் தொடர்பாகத் தரப்பட்டுள்ள கூற்றுக்களை, திட்டவட்டமாக நிகழும் (A), நிகழ இடமுண்டு (B), நிகழும் சந்தர்ப்பம் மிகவும் குறைவானது (C), எவ்வகையிலும் நிகழாது (D) என்றவாறாக வகைப்படுத்துக.
1. வாரத்தின் ஒரேநாளில் பிறந்த இருவர் உள்ளார்கள்.
2. 2021 இல் சரியாக ஒரே எண்ணிக்கையிலான சொற்களை வாசித்துள்ள இருவர் உள்ளார்கள்.
3. வலதுகைப்பழக்கமுள்ள பெண்கள் இருவர் உள்ளார்கள்.
4. உளப் புலக்காட்சி சர்வ சமமான இருவர் உள்ளார்கள்.
(1) A, C, B, D (2) B, C, A, D (3) B, D, A, C
(4) C, B, A, D (5) D, C, B, A

[பக். 6 ஐப் பார்க்க

**32.** "ஒவ்வொரு வீட்டிலும் விறகடுப்பொன்றும் மின்னடுப்பொன்றும் இருப்பதோடு, எரிவாயு இல்லாதபோது மாத்திரம் அவற்றுள் ஒன்று பயன்படுத்தப்படும்."
மேலே தரப்பட்டுள்ள கூற்றை நலிவடையச் செய்வதற்கெனத் திரட்டப்பட்ட பின்வரும் சான்றுகளுள் மிகப்பலவீனமான சான்றைத் தெரிவுசெய்க.

(1) எரிவாயு அடுப்பொன்றுடன் விறகடுப்பையும் பயன்படுத்துகின்ற, விறகடுப்பொன்றும் மின்னடுப்பொன்றும் உள்ள ஒரு வீடு
(2) எரிவாயு தட்டுப்பாடாகும்போது பயன்படுத்தும் விறகடுப்பு ஒன்று உண்டெனினும் மின்னடுப்பொன்று இல்லாத ஒரு வீடு
(3) எரிவாயு தட்டுப்பாடாகும்போது பயன்படுத்தும் விறகடுப்பொன்றும் எரிவாயு அடுப்பொன்றுடன் பயன்படுத்தும் மின்னடுப்பொன்றும் உள்ள ஒரு வீடு
(4) விறகடுப்பும் மின்னடுப்பொன்றும் உள்ள, எரிவாயு அடுப்பொன்றுடன் அவை இரண்டையும் பயன்படுத்தும் ஆயிரம் வீடுகள்
(5) எரிவாயு அடுப்புடன் ஒரேபோதியாகப் பயன்படுத்தாத விறகடுப்பு அல்லது மின்னடுப்பு உள்ள பத்தாயிரம் வீடுகள்


- **33, 34** ஆகிய வினாக்களுக்கு கீழே தரப்பட்டுள்ள தகவல்களைக் கருத்திற் கொள்க.

ஆய்வுப் பயணமொன்றின்போது, 500 m வீச்சினுள் சமிக்ஞைகளைப் பெறும், அனுப்பும் ஆற்றல் கொண்ட சாதனமொன்றுடன் பாசறையொன்றினுள் இருக்கும் மீனாவுடன் மீண்டும் இணைந்து கொள்வதற்காக காட்டில் வழிதவறிப்போயுள்ள ரீனா, ஷீனா ஆகிய ஆய்வாளர்கள் இருவரும் எதிர்பார்க்கின்றார்கள். ரீனா பாசறையிலிருந்து 7 km தூரம் வடக்கிலும் ஷீனா பாசறையிலிருந்து 13 km தூரம் மேற்கிலும் இருப்பதோடு, ஏககாலத்தில் அவர்கள் இருவரும் பாசறையை நோக்கிப் பயணத்தை ஆரம்பிக்கின்றனர். ரீனா 6 km வீச்சினுள் பரம்பத்தக்க சமிக்ஞை சாதனமொன்றுடன் 6 km $h^{-1}$ கதியில் நடந்து செல்லும் அதே வேளை ஷீனா 7 km வீச்சினுள் பரம்பத்தக்க சமிக்ஞை சாதனமொன்றுடன் 3 km $h^{-1}$ கதியில் நடந்து செல்கிறார்.

**33.** ரீனாவின் சமிக்ஞை சாதனம் மீனாவின் சமிக்ஞைகளைப் பெறுவது எப்போது ஆரம்பிக்கும்?
(1) 05 நிமிடங்களில் (2) 10 நிமிடங்களில் (3) 20 நிமிடங்களில்
(4) 30 நிமிடங்களில் (5) 45 நிமிடங்களில்

**34.** ரீனாவும், ஷீனாவும் ஒருவர் மற்றவரது சமிக்ஞைகளைப் பெறுவது எப்போது ஆரம்பிக்கும்?
(1) 05 நிமிடங்களில் (2) 10 நிமிடங்களில் (3) 20 நிமிடங்களில்
(4) 30 நிமிடங்களில் (5) 45 நிமிடங்களில்

- **35, 36** ஆகிய வினாக்கள் 5000 இலும் குறைந்த எண்ணிக்கையான நபர்களைக் கொண்ட ஒரு சுகாதார வைத்திய அதிகாரி (MOH) பிரிவில் COVID தடுப்பு மருந்தொன்றின் நான்காவது ஊட்டைப் (DOSE) பெற்ற நபர்களின் எண்ணிக்கைகளைக் காட்டும் கீழே தரப்பட்டுள்ள வரைபைக் கருதுக.




**35.** பெப்ரவரி தொடக்கம் யூன் வரையில் இந்த MOH பிரதேசத்தில் மிகக்கூடுதலான எண்ணிக்கையிலான தடுப்பூசிகள் செலுத்தப்பட்டுள்ள மாதம் எது?
(1) பெப்ரவரி (2) மார்ச் (3) ஏப்ரல் (4) மே (5) யூன்

**36.** பெப்ரவரி தொடக்கம் யூன் வரையில் இந்த MOH பிரதேசத்தில் மிகக்குறைவான எண்ணிக்கையிலான தடுப்பூசிகள் செலுத்தப்பட்டுள்ள மாதம் எது?
(1) பெப்ரவரி (2) மார்ச் (3) ஏப்ரல் (4) மே (5) யூன்

● **37** தொடக்கம் **39** வரையிலான வினாக்கள் பின்வரும் தகவல்களை அடிப்படையாகக் கொண்டவை.

ஒரு பாடசாலையிலிருந்து கடந்த ஆண்டில் க.பொ.த (உயர்தர) பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களுள் பொதுச் சாதாரணப் பரீட்சையில் மிகக்கூடிய புள்ளிகள் பெற்ற ஏழுபேர் $A, B, C, D, E, F, G$ ஆகியோர் ஆவர். அவர்களில் எந்த இருவரினது புள்ளிகள் சமமானவை அல்ல. அவர்கள் பெற்ற புள்ளிகளை இறங்குவரிசைப்படி ஒழுங்குபடுத்தி அதற்கமைய அவர்களுக்கு முறையே $1, 2, 3, ..., 7$ என நிலைகள் வழங்கப்பட்டன. இந்த ஏழு மாணவர்களும் வட்டமாக ஒரு மேசையைச் சூழ அதன் மையத்தை நோக்கியவாறு அமர்ந்துள்ளனர். அத்துடன் பின்வரும் தகவல்களும் வழங்கப்பட்டுள்ளன.

- ✳ $A$ ஓர் ஆண் பிள்ளை ஆவார். பெற்ற புள்ளிகளின்படி அவர் ஆறாமவர் ஆவர்.
- ✳ $D, F, G$ ஆகியோர் ஆண்பிள்ளைகளாவதோடு, $C, E$ ஆகியோர் பெண்பிள்ளைகள் ஆவர்.
- ✳ புள்ளிகளின்படி, $C$ ஐந்தாமவர் ஆவாரெனினும் $D$ நான்காமவர் அல்ல.
- ✳ $C$ இன் இருபுறமும் அடுத்துள்ளவர்கள் இரண்டு பெண் பிள்ளைகள் ஆவர். $C$ யின் இடதுபுறத்தே மூன்றாவது ஆசனத்தில் $G$ அமர்ந்துள்ளார்.
- ✳ $C$ இன் அடுத்ததாக இடது புறத்தே $E$ அமர்ந்துள்ளதோடு புள்ளிகளின்படி ஏழாமவர் $C$ இன் அடுத்துள்ள வலது புறத்தில் அமர்ந்துள்ளார்.
- ✳ $C$ இற்கும் புள்ளிகளின்படி நான்காமவருக்கும் இடையே ஒரு மாணவன் மாத்திரம் அமர்ந்துள்ளார்.
- ✳ $D$ இற்கும் $F$ இற்கும் இடையேயும் ஒரு மாணவன் மாத்திரமே அமர்ந்துள்ளார்.
- ✳ புள்ளிகளின்படி இரண்டாமவருக்கும் ஆறாமவருக்கும் இடையே இரு மாணவர்கள் அமர்ந்துள்ளனர்.

**37.** புள்ளிகளின்படி $F$ இனது நிலை யாது?
(1) 1 (2) 2 (3) 3 (4) 4 (5) 7

**38.** புள்ளிகளின்படி இரண்டாமிடத்திலிருப்பவர் யார்?
(1) $B$ (2) $D$ (3) $E$ (4) $F$ (5) $G$

**39.** மாணவர்கள் இருவருக்கு புள்ளிகளின்படி கிடைக்கும் நிலைகளைத் துணிவதற்கு, தரப்பட்டுள்ள தகவல்கள் போதுமானவையல்ல. அந்த மாணவர்கள் இருவரும் யாவர்?
(1) $B, D$ (2) $D, E$ (3) $D, F$ (4) $D, G$ (5) $E, F$

● **40** தொடக்கம் **42** வரையிலான வினாக்கள் பின்வரும் தகவல்களை அடிப்படையாகக் கொண்டவை.

தொழிற்பயிற்சி நிறுவனமொன்றினால் நடாத்தப்படும் தகவல், தொடர்பாடல் தொழினுட்ப (ICT) டிப்ளோமா பயிற்சிநெறியொன்றில் சேர்ந்துகொள்வதற்காகப் பின்வரும் தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள இலங்கைப் பிரஜைகள் தகுதி பெற்றவர்களாவர்.

1. வயது : 2023 ஜனவரி 1 ஆந் திகதியன்று 18 வயதுக்கு குறையாததாகவும் 22 வயதுக்கு மேற்படாததாகவும் இருக்க வேண்டும்.
2. கல்வித் தகைமைகள் : பின்வரும் எந்தவொரு மாற்று தெரிவும் கருத்திற் கொள்ளப்படும்.

| மாற்றுத் தெரிவு | க.பொ.த (சாதாரண தர)ப் பரீட்சை (ஒரே அமர்வில்) | பொதுத் தகவல் தொழினுட்பப் (GIT) பரீட்சை |
|---|---|---|
| (i) | ICT, ஆங்கிலம், கணிதம், விஞ்ஞானம் ஆகியவற்றுக்கு C அல்லது அதற்கு உயர்வான தரங்களுடன் ஆறுபாடங்களில் சித்தி பெற்றிருத்தல் | S அல்லது அதிலும் உயர்வான தரம் |
| (ii) | ஆங்கிலம், கணிதம், விஞ்ஞானம் ஆகிய பாடங்களில் C அல்லது அதற்கு உயர்வான தரங்களுடன், ICT இல் S தரமும் உட்பட ஆறுபாடங்களில் சித்தி பெற்றிருத்தல் | C அல்லது அதிலும் உயர்வான தரம் |
| (iii) | ஆங்கிலம், கணிதம், விஞ்ஞானம் ஆகிய பாடங்களில் C அல்லது அதிலும் உயர்வான தரங்களுடன் ஆறுபாடங்களில் சித்தி பெற்றிருத்தல் | A அல்லது B தரம் |

குறிப்பு : GIT பரீட்சையில் உரிய தகைமைகளைப் பூர்த்தி செய்யாத விண்ணப்பதாரிகள், நிறுவனத்தினால் நடாத்தப்படும் ICT தகைமை பெறும் பரீட்சைக்குத் தோற்றுவதோடு, GIT பரீட்சையில் உரிய தரத்தைப் பெறுவது என்னும் இணக்கப்பாட்டுடன் கவனத்திற் கொள்ளப்படுவர்.

[பக். 8 ஐப் பார்க்க

இலங்கை விண்ணப்பதாரிகள் ஐவரினது பின்வரும் தகவல்களைக் கருதுக.

அனில் : பிறந்த திகதி 2004.01.01 ஆகும். 2020 இல் க.பொ.த (சாதாரண தர)ப் பரீட்சையில் கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலம், ICT ஆகிய ஆறு பாடங்களில் A தரங்களைப் பெற்றுள்ளார். GIT பரீட்சைக்குத் தோற்றவில்லை.

பாரதி : 2001 ஆம் ஆண்டில் பிறந்துள்ளார். க.பொ.த (சாதாரண தர)ப் பரீட்சைக்குத் தோற்றி ஒரே தடவையில் கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலம், ICT உட்பட மேலும் இரண்டு பாடங்களில் C தரங்கள் பெற்றுள்ளதோடு, GIT பரீட்சையிலும் C தரம் பெற்றுள்ளார்.

சித்ரா : 2003 ஆம் ஆண்டில் பிறந்துள்ளார். க.பொ.த (சாதாரண தர)ப் பரீட்சையில் ஒரே தடவையில் கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலம் உட்பட ஆறு பாடங்களில் C தரங்களும் ICT இல் S தரமும், GIT பரீட்சையில் C தரமும் பெற்றுள்ளார்.

தேவி : 2000 ஆம் ஆண்டில் பிறந்துள்ளார். க.பொ.த (சாதாரண தர)ப் பரீட்சையில் ஒரே தடவையில் கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலம், ICT ஆகிய பாடங்கள் உட்பட எட்டு பாடங்களில் C தரங்களுடன் சித்தியடைந்துள்ளார். GIT பரீட்சைக்குத் தோற்றவில்லை.

உமா : 2003 ஆம் ஆண்டில் பிறந்துள்ளார். க.பொ.த (சாதாரண தர)ப் பரீட்சையில் ஒரே தடவையில் ஆங்கிலம், ICT ஆகிய பாடங்களில் S தரங்களும் கணிதம், விஞ்ஞானம் உட்பட வேறு ஆறு பாடங்களில் C தரங்களும் பெற்றுள்ளார். GIT பரீட்சையில் B தரம் பெற்றுள்ளார்.

**40.** மேற்படி ஐந்து விண்ணப்பதாரிகளுள், விண்ணப்பத்திரத்தினை கவனத்திற் கொள்வதற்காக, ICT யிலான தகைமை பெறுவதற்குரிய பரீட்சைக்குத் தோற்றவேண்டிய விண்ணப்பதாரி யார்?

(1) அனில் (2) பாரதி (3) சித்ரா (4) தேவி (5) உமா

**41.** ICT யிலான தகைமைப் பரீட்சைக்குத் தோற்றாமலேயே டிப்ளோமா பாடநெறியில் சேர்ந்து கொள்வதற்கான தகைமையைப் பெற்றுள்ள விண்ணப்பதாரிகள் யாவர்?

(1) அனில், பாரதி (2) பாரதி, சித்ரா (3) சித்ரா, தேவி
(4) தேவி, உமா (5) உமா, அனில்


**42.** இவற்றுள் எந்த மாற்றுத் தெரிவின் கீழாயினும் டிப்ளோமா பாடநெறியில் சேர்ந்து கொள்வதற்கான தகைமையைப் பெற்றிராத விண்ணப்பதாரிகள் யாவர்?

(1) அனில், பாரதி (2) பாரதி, சித்ரா (3) சித்ரா, தேவி
(4) தேவி, உமா (5) உமா, அனில்

● **43, 44** ஆகிய வினாக்கள் பின்வரும் உருவில் உள்ள தகவல்களை அடிப்படையாகக் கொண்டவை.

பாடசாலையொன்றில் தரம் 13 வகுப்புகளில் முறையே பௌதிகவியல், உயிரியல், விவசாயம் ஆகிய பாடங்களைப் பயிலும் மாணவர்களின் எண்ணிக்கையை முறையே கிடையான செவ்வகம், நிலைக்குத்தான செவ்வகம், சாய்வான செவ்வகம் ஆகியன காட்டுகின்றன.

இப்பாடசாலையில் உயிரியல் விஞ்ஞானப் பிரிவின் ஒவ்வொரு மாணவரும் மூன்று பாடங்களைக் கற்பதோடு, அவற்றுள் உயிரியலும் இரசாயனவியலும் கட்டாயமானவை. இம்மாணவர்களின் மற்றைய பாடம் பௌதிகவியல் அல்லது விவசாயம் ஆகும். மேலும், உயிரியலையோ பௌதிகவியலையோ கற்கும் எல்லா மாணவர்களும் இரசாயனவியலையும் கற்கின்றனர்.




**43.** இப்பாடசாலையில் தரம் 13 இல் உயிரியல் விஞ்ஞானப் பிரிவில் எத்தனை மாணவர்கள் உள்ளனர்?

(1) 110 (2) 120 (3) 130 (4) 140 (5) 150

**44.** தரம் 13 வகுப்புக்களில் இரசாயனவியலைக் கற்கும் மாணவர்களின் குறைந்தபட்ச எண்ணிக்கை யாது?

(1) 120 (2) 170 (3) 210 (4) 250 (5) 290

[பக். 9 ஐப் பார்க்க

**45.** இவ்வினாவில் 1, 7 என இலக்கமிடப்பட்ட இரண்டு வாக்கியங்களுக்கு இடையே உள்ள *A, B, C, D, E* ஆகிய வாக்கியங்கள் அவற்றின் சரியான ஒழுங்குமுறைப்படி இடம்பெறவில்லை. தருக்க ரீதியான ஏழு வாக்கியங்களாலான ஒரு தொடரொழுங்கை அமைப்பதற்கு மிகப் பொருத்தமான ஒழுங்குமுறையைத் தெரிவுசெய்க.

1 - சாந்தன் அவனது க.பொ.த. (சாதாரண தர) சான்றிதழ்களின் மூலப் பிரதிகள் காணாமற்போயுள்ளமையினால் கவலைப்படுகின்றான்.

*A* - இலங்கையில் எல்லா நோக்கங்களுக்கும் போதுமான சான்றிதழ்களைத் தம்மால் வழங்கமுடியும் என அதிபர் அவரிடம் கூறினார்.

*B* - சாந்தன் அதிபருக்கு நன்றி தெரிவித்ததோடு தாம் வெளிநாட்டுப் பல்கலைக்கழகமொன்றுக்குச் சமர்ப்பிப்பதற்காக மற்றுமொரு சான்றிதழைப் பரீட்சைத் திணைக்களத்திலிருந்து பெறுவதாயின் அதற்கான நடைமுறை யாது என அதிபரிடம் விசாரித்தான்.

*C* - எனவே மற்றுமொரு மூலப்பிரதியை அல்லது அதற்கு ஒப்பான ஒரு சான்றிதழைப் பெறுவதற்காக சாந்தன் அதிபரிடம் ஆலோசனை கோரினான்.

*D* - க.பொ.த. (சாதாரண தர) சான்றிதழின் ஒளிப்படப் பிரதிகள், எதிர்கால கல்வி நடவடிக்கைகளுக்கோ, தொழிலுக்கான நேர்முகப் பரீட்சைக்கோ போதுமானவையல்ல என்பதை சாந்தன் அறிவான்.

*E* - வங்கியொன்றில் இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் முறையூடாகப் பணம் செலுத்துவதன் மூலம் நிகழ்நிலை (Online) முறையின்வழியே அல்லது பத்தரமுல்லை பரீட்சைத் திணைக்களத்துக்கு நேரடியாகச் செல்வதன் மூலம் ஒன்று முதல் மூன்று வரையிலான சான்றிதழ் மூலப் பிரதிகளைப் பெற முடியும் என அதிபர் சாந்தனுக்கு விளக்கினார்.

7- பரீட்சைத் திணைக்களத்திலிருந்து மற்றுமொரு சான்றிதழைப் பெறும் முறையை அறிந்து கொண்டமையினால் சாந்தன் மகிழ்ச்சியடைந்தான்.

(1) *A, B, C, D, E* (2) *C, A B, D, E* (3) *C, A, D, B, E*
(4) *D, C, A, B, E* (5) *D, C, B, A, E*

**46.** கீழே தரப்பட்டுள்ள *A, B, C, D, E* ஆகிய ஐந்து பகுதிகளுள் ஒவ்வொன்றும் மும்மூன்று கூற்றுக்களைக் கொண்டவை. ஒரு கருத்துள்ள தொடராக ஒழுங்குபடுத்தத்தக்க வாக்கியங்களைக் கொண்ட பகுதி இவற்றுள் எது?

*A* (*a*) ஆதிகாலம் தொட்டு யோகப் பயிற்சி செய்யப்படுகின்றது.
(*b*) யோகப் பயிற்சி என்பது யாதேனும் சமயச் செயற்பாடொன்றில் பயிற்றல் அன்று.
(*c*) யோகப் பயிற்சி உடற்சுகாதாரத்துக்கு மாத்திரமன்றி உள விழிப்புணர்வுக்கும் நல்லது.

*B* (*a*) மலைநாட்டில் மண்சரிவுகளுக்கு இடமுண்டு.
(*b*) மலைநாட்டில் அதிக மழைவீழ்ச்சி மண்சரிவுகளை ஏற்படுத்தும்.
(*c*) பொதுவாக தோட்டக் குடியிருப்புக்களில் வாழும் வறிய தோட்டத்தொழிலாளர்கள் மண்சரிவுகள் காரணமாக அவதியுறுவதுண்டு.

*C* (*a*) நிசான் போதைப்பொருளுக்கு அடிமையான ஒருவராயினும் அவர் புனருத்தாரண வகுப்புக்களில் பங்குபற்றவில்லை.
(*b*) அவன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டபோது இறந்தான்.
(*c*) ஹெரோயினை மிகையாகப் பயன்படுத்தியதால் அவனது மூளையில் பாதகமான தாக்கத்தை ஏற்படுத்தியது.


*D* (*a*) நுளம்புகள் டெங்கு நோயைப் பரப்பும்.
(*b*) நுளம்புகள், வைரசுகளையும் வேறு நுண்ணங்கிகளையும் பரப்பும்.
(*c*) நுளம்புகள் காரணமாக மலேரியா பரவும்.

*E* (*a*) இந்நாட்டு மக்கள் எதிர்நோக்கும் சில சமூக - பொருளாதாரப் பிரச்சினைகளுக்குப் பிரதான காரணம் வெளிநாட்டு ஒதுக்கப் பற்றாக்குறையாகும்.
(*b*) ஏற்றுமதி, சுற்றுலாக் கைத்தொழில் சீர்குலைவு என்பன பிரதான பிரச்சினையாகும்.
(*c*) தாமதமான ஒரு தலையீடாயினும் சமகால நெருக்கடிகளுள் நிவாரணம் வழங்க சர்வதேச நாணய நிதியத்தினால் இன்னமும் முடியும்.

(1) *A* (2) *B* (3) *C* (4) *D* (5) *E*

[பக். 10 ஐப் பார்க்க


**47.** பின்வரும் சித்திரங்களினால் விவரிக்கப்படும் சம்பவத்தை கவனத்திற் கொள்க.




*A*





*B*




*C*



*D*



*E*



*F*

மேற்படி படங்களின் பின்வரும் எந்த வரிசைப்படுத்தல் அச்சம்பவத்தின் சரியான படிமுறை ஒழுங்கைக் காட்டுகின்றது?

(1) *A, D, C, F, B, E* (2) *A, F, D, C, B, E* (3) *D, C, B, F, A, E*
(4) *F, C, B, D, E, A* (5) *F, D, C, E, B, A*

● **48** தொடக்கம் **50** வரையிலான வினாக்கள் பின்வரும் தகவல்களை அடிப்படையாகக் கொண்டவை.

ஒரு சனிக்கிழமையன்று காலையில் ஒரு மனிதன் அலுவலக வேலைகள் காரணமாக தமக்கு ஓய்வேதும் கிடையாது எனவும், மூத்த மகனுடன் சந்தைக்குச் சென்று ஒரு வார காலத்துக்குத் தேவையான நுகர்வுப் பொருள்களைக் கொண்டு வருமாறும் தமது மனைவியிடம் கூறினார். சந்தையில் அவர்கள் மகனுக்குக் கற்பிக்கும் ஆசிரியர் ஒருவரைச் சந்தித்தனர்.

கீழே *A* தொடக்கம் *L* வரையிலான உரையாடல்கள் தாய், அவரது மகன், ஆசிரியர் ஆகியோருக்கு இடையில் இடம்பெற்ற உரையாடலைக் காட்டுகின்றன. அவர்களுக்கு இடையிலான உரையாடல் சரியான ஒழுங்கு முறைப்படி தரப்படவில்லை.

*A*. சந்தையில் மனிதர்கள் பலர் உள்ளனர். உங்கள் ஆசிரியரைக் கண்டீர்களா?

*B*. ஆம், அவர் எனது கணித ஆசிரியர் சாரா சேர்.

*C*. நாம் சைக்கிளில் போவோமா?

*D*. அம்மா நாங்கள் சந்தைக்குப் போவது பஸ் வண்டியிலா? எங்கள் சைக்கிள் வண்டியிலா?

*E*. ஆமாம், அது இலகுவானது, இலாபகரமானது, எனக்கு விருப்பமானது.

*F*. மகன், நீங்கள் கதைத்துவிட்டு வாருங்கள்; அதற்குள் நான் தேவையான பொருள்களை வாங்குகிறேன்.

*G*. காலை வணக்கம் வினோ!. நீங்கள் தனியாகவா வந்தீர்கள்?

*H*. காலை வணக்கம் சேர்!

*I*. இல்லை சேர், நான் அம்மாவுடன் வந்தேன். அம்மா சந்தையில் பொருள்கள் வாங்குகிறார்.

*J*. நான் பொருள்கள் வாங்கி முடித்து விட்டேன் வினோ! நீங்கள் ஆசிரியருடன் கதைத்திருப்பீர்கள்தானே. இனி நாம் வீட்டுக்குப் போவோமா?

*K*. சரி, நீங்களும் அவருடன் போங்கள்; இந்த நாள் நல்ல நாள் ஆகட்டும்! வணக்கம்.

*L*. வணக்கம் சேர்!

**48.** தாய்க்கும் அவரது மகனுக்கும் இடையிலான உரையாடல்களை சரியான ஒழுங்கில் தருவது பின்வருவனவற்றுள் எது?

(1) *D, C, A, E, F, B* (2) *D, C, E, A, B, F* (3) *D, E, A, B, C, F*
(4) *D, E, A, B, F, C* (5) *D, E, A, C, B, F*

**49.** ஆசிரியருக்கும் மாணவனுக்கும் இடையிலான உரையாடல்களை சரியான ஒழுங்கில் தருவது பின்வருவனவற்றுள் எது?

(1) *G, H, I, K, L* (2) *G, H, I, L, K* (3) *H, G, I, K, L*

(4) *H, G, I, L, K* (5) *H, G, K, L, I*

**50.** ஒட்டுமொத்த உரையாடலையும் தருக்க ரீதியான ஒழுங்கில் தருவது பின்வருவனவற்றுள் எது?

(1) *D, E, A, C, B, L, F, G, H, I, K, J*
(2) *D, C, E, A, L, B, F, H, G, I, J, K*
(3) *D, E, A, B, C, L, F, H, G, I, J, K*
(4) *D, E, A, B, C, F, G, H, I, K, J, L*
(5) *D, C, E, A, B, F, H, G, I, J, K, L*

* * *

school Exam & Seminar Papers